# உணரா அறிவினரின் அறைகூவல் [19:8-20]

*"உணரா அறிவினர்" என்ற வார்த்தையானது "மறைவான" என்ற அர்த்தம் தரும் occultus என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து வருகின்றது, இது மறைவான அல்லது மூடலான விந்தைகள் அல்லது அறிவைக் குறிக்கின்றது.* American Heritage Electronic *அகராதியில்* "occult" *என்பது பின்வருமாறு விளக்கப் படுகின்றது:*

1. *இயற்கைக்கு அப்பாற்பட்ட செல்வாக்குகள், முகமைகள் அல்லது கோட்பாடுகளுடன் தொடர்புடைய அல்லது செயல்படுகின்ற தன்மை.*
2. *மனிதருடைய புரிந்து கொள்ளுதலின் எல்லைக்கு அப்பாற்பட்டது; புரிந்து கொள்ள முடியாதது.*
3. *தன் விருப்பம் உள்ளவருக்கு மட்டுமே கிடைப்பது; இரகசியமானது.*

*உபாகமம் 18:9-14ல், பின்வரும் மூன்று தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தக் கூடிய உணரா அறிவின் நடைமுறைகள் பல அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன: (1) வருவது காட்டல் (சோதிடம் உட்பட, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் பற்றிக் கூறுதல்); (2) மாயவித்தை (மாந்திரீகம் கூறுதல் உட்பட்டது); மற்றும் (3) ஆவிகளிடத்தில் பேசுதல். இவை யாவும் தேவனால் கண்டனம் செய்யப்பட்டன (யாத். 22:18; லேவி. 19:31; 20:6, 27; ஏசாயா 47:13, 14 ஆகியவற்றையும் காணவும்). அதிர்ஷ்டத்தை விற்பவர்கள் என்ற புத்தகத்தில் கேரி வில்பர்ன் அவர்கள் உணரா அறிவினரின் இருபதாம் நூற்றாண்டு விளக்கங்களை இதே மூன்று தலைப்புக்களில் வகைப்படுத்தினார்: (1) அதிர்ஷ்டம் கூறுதல் (சோதிடம், சீட்டு ஜோசியம், கைரேகை சோதிடம் மற்றும் மனோ சோதிடம் உட்பட்டது); (2) மந்திரவாதம் (மாயவித்தை, சூனியம் மற்றும் குட்டிசாத்*

தான் வேலை உட்பட்டது); மற்றும் (3) ஆவிகளிடத்தில் பேசுதல் (ஆய்வுக் கூட்டங்கள், வழிப்படுத்துதல் மற்றும் அவுஜாபோர்டு உட்பட்டது). கர்த்தரால் இவை யாவும் தெளிவாகக் கண்டனம் பண்ணப்பட்டிருந்தாலும், உணரா அறிவானது புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் வளர்ந்து மலர்ந்தது போலவே இன்றைய நாட்களிலும் வளர்ந்து மலர்ந்து கொண்டுள்ளது.

பவுலின் நாட்களில் உணரா அறிவுச் செயல்பாட்டிற்கு எபேசு நகரமே மையப்பகுதியாக விளங்கியது. அத்தேனே பட்டணத்தின் அன்றாட வாழ்க்கையானது அறிவுக் கூர்மை யைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது, கொரிந்து பட்டணத் தின் அன்றாட வாழ்க்கையானது ஒழுக்கவீனங்களைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது, எபேசு பட்டணத்தின் அன்றாட வாழ்க்கையானது மந்திரங்களைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந் தது. மாயவித்தைக்காரர்கள், சோதிடர்கள், இடையீட்டாளர் கள் மற்றும் அதிர்ஷ்டம் பற்றிக் கூறுபவர்கள் ஆகியோர் எபேசு பட்டணத்தில் மொய்த்துக் கொண்டிருந்தார்கள். எபேசியர்கள் மனதின் பெருமை அல்லது ஒழுக்கக் குறைபாடு ஆகியவற்றால் அல்ல, விளங்காத அற்புதங்களின் ஆட்டிப் படைத்தலினா லேயே அதிகம் துன்பமடைந்தார்கள்.

கொரிந்து நகரமானது அந்நாட்களின் மொழியில் ஐயத்திற்கிடமான வார்த்தையைச் சேர்க்கும் பெருமை பெற்றது என்று நாம் முன்பு கண்டோம் ("கொரிந்தியப் படுத்துதல்" என்றால் வேசித்தனம் செய்தல் என்று அர்த்தமாயிருந்தது). அது போலவே, எபேசு நகரமும் சொல் வளத்திற்கு வார்த்தை சேர்த்தது: மாயவார்த்தைகள் மற்றும் மந்திர உச்சாடனங்கள் ஆகியவை "எபேசுவின் கடிதங்கள்" என்று அழைக்கப்பட்டன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, ஷேக்ஸ்பியர் அவர்கள், எபேசுவின் புகழைப் பின்வரும் வார்த்தைகளில் சுருக்கிக் கூறினார்:

> மக்கள், இந்நகரானது மாபெரும் வஞ்சகங்கள் நிறைந்த தென்றும், கண்களை ஏமாற்றும் கடிவிரைவான வித்தைக் காரர்களும், மனதை மாற்றும் இருள் வேலை மந்திரவா திகளும், ஆத்துமாவைக் கொல்லும் சரீரத்தை உருக் குலைக்கும் சூனியக்காரிகளும், மறைவான ஏமாற்றுக்

காரர்களும், வீணான நயப்பேச்சாளர்களும், இது போன்ற இன்னும் பல பாவத்தை சுயாதீனமாய் செய்பவர்களும் நிறைந்ததென்றும் கூறுவர்.

ஆவிகளின் உலகத்தில் எபேசு நகரம் பெற்றிருந்த இடம் பற்றி உலக ஆதாரங்கள் எதுவும் கூறாதிருந்தாலும் கூட, வேதவசனங்களில் இருந்து அவைகளை நாம் பெற முடியும். அப். 19:19ல் எபேசுவில் பவுலின் ஊழியத்தின்போது, "மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசாகக் கண்டார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம். ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசுகள் என்பது இன்று போலவே அன்றும் ஒரு நல்ல தொகையாகவே இருந்திருக்க வேண்டும். மந்திரவாதங்கள், மாயச் சொற்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள் ஆகியவைகள் நிறைந்த நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தோற்சுருள்கள் எரிக்கப் பட்டிருக்க வேண்டும்.

இந்தப் பாடத்தில் நாம், எபேசுவில் பவுல் இருந்த மூன்று வருடங்களின் வரலாற்றைத் தொடர்ந்து படிக்கின்றோம். அந்த நகரில் இருந்த மக்களின் மனங்களை மறைத்திருந்த இருளான மூட நம்பிக்கைகளிடம் தேவன் எவ்விதம் செயல்பட்டார் என்பதை விசேஷ கவனம் செலுத்திக் காண்போம்.

## ஒரு பழைய அறைகூவல் (19:8-10)

உணரா அறிவினரின் அறைகூவலைப் படிப்பதற்கு முன்னர், பவுல் தமது சுயஜனத்தாருக்குப் போதித்தல் என்ற ஒரு பழைய அறைகூவலை எப்படிக் கையாண்டார் என்பதை நாம் கவனிப்பது தேவையாகும்.

பவுல் தமது இரண்டாவது பயணத்தின் முடிவின்போது எபேசுவில் இருந்த குறுகிய காலத்தில் அங்கு இருந்த ஜெப ஆலயத்தில் பேசினார், மற்றும் அவர்கள் அவரை அங்கு பின்னும் சில நாட்கள் இருக்கும்படியாக வற்புறுத்தினார்கள். அவர் தாம் உடனே புறப்பட வேண்டும் என்றும், ஆனாலும் தேவனுக்குச் சித்தமானால் மறுபடியும் வருவதாகவும்

*(18:19-21) கூறினார். இப்பொழுது அவர் அந்த வாக்குறுதியைக் காத்தார். ''பின்பு பவுல் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் ...'' (19:8அ) என்று வாசிக்கிறோம். அடித்து உதைக்கப்படாமல் மூன்று மாதமளவும் ஜெப ஆலயத்தில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்ட இச்செயலானது பவுலைப் பொறுத்தமட்டில் ஒரு சாதனை யாகும்! (17:2, 3ஐக் காணவும்). அநேகமாய் அவர் தமது முந்திய பயணத்தில் பெற்றிருந்த ஆதரவான எண்ணங்களே அவ்வளவு நாள் பேசுவதற்கு அனுமதிக்கப்படக் காரணமாயிருந்திருக்க வேண்டும்.[1]*

*பவுலின் ஜெப ஆலயப் பிரசங்கத்தில், அவர் "தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணை பண்ணி, புத்தி சொல்லிக் கொண்டு வந்தான்" (வ. 8ஆ). "தேவனுடைய ராஜ்யம்" என்ற சொற்றொடரானது மேசியாவைப் பற்றியும் அவரது ராஜ்யத்தைப் பற்றியும் பேசும் இன்னொரு வழி முறையாகும் (28:31ஐக் காணவும்). பவுல், இயேசுவைப் பற்றியும் அவரது சபையைப் பற்றியும் மக்களுக்குக் கூறினார்.*

*பவுலுக்கு இங்கு ஜெப ஆலயத்தில் கிடைத்த ஆரம்ப வரவேற்பு வழக்கத்தை விட மிக நன்றாக இருந்தாலும் நிறைவு விளைவானது ஒன்று போலவே இருந்தது. யூதர்களில் சிலர், "கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக்"[2] "கூட்டத்திற்கு[3] முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்து'' பேசத் தொடங்கினார்கள் (19:9அ). ''இந்த மார்க்கம்'' என்ற சொற்றொடரானது கிறிஸ்தவத்தை("வழியாகிய" [யோவா. 14:6] இயேசுவைப் பின்பற்றுவதை)க் குறிக்கின்றது. விசுவாசியாத யூதர்கள் இயேசுவை வெளியரங்கமாய் அவதூறு செய்தபோது, பவுல் தாம் ஜெப ஆலயத்தை விட்டு வெளியேற வேண்டிய வேளை வந்ததென்று முடிவு செய்தார் (மத். 7:6ஐக் காணவும்). இவ்விதமாக, ''அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக் கொண்டு," (அப். 19:9ஆ) - அதாவது, மேசியாவைப் பற்றியும் மேசியாவின் இராஜ்யத்தைப் பற்றியும் அவர் போதித்தவைகளை அரவணைத்துக் கொண்டவர்களைப் பிரித்துக் கொண்டு சென்றார்.*

*பிலிப்பி நகரத்தில், பவுல் ஒரு நதியின் கரையில் போதித் திருந்தார்; அத்தேனே நகரத்தில், அகோராவிலும், அரியோ*

பெகஸிலும் போதித்திருந்தார்; கொரிந்து நகரத்தில் தீத்து யுஸ்து என்பவருடைய தனிப்பட்ட தங்குமிடத்தில் போதித்திருந்தார்; எபேசு நகரத்தில் அவர், தாம் போதிக்கக் கூடிய ஒரு பள்ளிக் கட்டிடத்தை அவர் கண்டார்.[4] அவர், “திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியா சாலையிலே[5] அநுதினமும்” சம்பா ஷித்துக் கொண்டு வந்தார் (வ. 9இ). திறன்னு என்னும் பெயரு டைய மனிதர் ஒருவர் (இவரைப் பற்றி நாம் வேறொன்றும் அறிவதில்லை) தமக்குச் சொந்தமான பள்ளிக் கூடம் ஒன்றை பவுலுக்கு வாடகைக்கோ அல்லது கடனுக்கோ கொடுத்தார். “திறன்னு” என்பது “tyrant” (சர்வாதிகாரி) என்பதற்கான இலத்தீன் வார்த்தையாகும், ஒருவேளை இப்பெயர் அவரது மாணவர்களால் அவருக்குச் சூட்டப்பட்ட பட்டப் பெயராக இருக்கலாம்!

பவுலின் போதனையைப் பற்றி மேற்கத்திய வசன நடை யானது, ஆர்வமுள்ள ஒரு குறிப்பைக் கூடுதலாகத் தருகின்றது: “... அவர் அநுதினமும் ஐந்தாம் மணி வேளை முதல் பத்தாம் மணி வேளை வரையிலும் போதித்துக் கொண்டு வந்தார்.” “ஐந்தாம் மணி வேளை முதல் பத்தாம் மணி வேளை வரை” என்பது காலை 11-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை உள்ள நேரமாகும். உலகின் அந்தப் பகுதியில் இருந்த மக்கள், நாளின் அந்தப் பகுதியில் ஓய்வு கொள்வது வழக்கமாகும். நாளின் மையப்பகுதியில் இந்த ஐந்து மணி இடைவெளியில், மற்றவர்கள் ஓய்வு கொள்ளும் போது, வகுப்பறையானது பயன்படுத்தப்படாமல் இருந்தது, அங்கு பவுல், கிறிஸ்துவைப் பற்றி அறிய விரும்பியவர்களுக்குப் போதித்தார்.

பவுல் எபேசுவில் தமக்காகவும் தம்முடனே கூட இருந்தவர் களுக்காகவும் தமது கைகளினால் வேலை செய்ததாகப் பின்னாளில் குறிப்பிட்டார் (20:34). மற்றும், அவர் வெளியரங்க மாய்ப் போதித்ததோடு, வீடு வீடாகவும் போதித்தார் (வ. 20) - பகலில் மட்டுமல்லாது இரவிலும் போதித்தார் (வ. 31). எனவே, பவுலின் அன்றாடப் பணி நடைமுறை அட்டவணை பின்வருமாறு இருந்திருக்க வேண்டும்: காலை 7 மணி முதல் 11 மணி வரை அவர் (அநேகமாய் ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாளின் பணிமனையில்) கூடாரத் தொழில் செய்தார்; காலை 11 முதல் மாலை 4 மணி வரையிலும் திறன்னு

வின் பள்ளியில் தேவனுடைய வசனத்தைப் போதித்தார்; மாலை 4 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் அவர் மேலும் கூடார வேலை செய்தார்; இரவு 9.30 முதல் நள்ளிரவு வரையிலும் அவர் வீடுகளில் போதித்தார். இது பவுலைப் பற்றிச் சிலவற்றைக் கூறுகின்றது: அவர் வசனத்தைப் போதிக்க விரும்பினார்!

திறன்னுவின் பள்ளியில் பவுல் போதித்த நேர வேளையான தும் கூட அப்பகுதியில் இருந்த மக்களைப்பற்றி இன்னும் சிலவற்றைக் கூறுகின்றது: அவர்கள் வசனத்தைப் படிக்க விரும்பினார்கள். ஒவ்வொரு நாளும் அவர்களின் நண்பர்களும், அண்டை அயலார்களும் பகல் ஓய்வு கொள்ளுகையில், அவர்கள் பவுலின் போதனையைக் கவனித்தார்கள்! நாம் எபேசுவில் வாழ்ந்திருந்தால், கற்றுக் கொள்ள இவ்வளவு ஆர்வமாய் இருந்திருப்போமா? நாம் வாழுகின்ற இடத்தில் கற்றுக் கொள்வதற்கு இவ்வளவு ஆர்வத்துடன் இருக்கின் றோமா?

வசனம் 10ல், “இரண்டு வருஷகாலம் இப்படி நடந்த” தாகக் கூறப்படுகின்றது. இந்த இரண்டு வருடகாலமும், பவுல் ஜெப ஆலயத்தில் போதித்திருந்த மூன்று மாத காலமும் (வ. 8), (ஒருவேளை) வசனம் 22ன் ‘‘சில காலமும்’’ சேர்ந்தால் பின்னாளில் பவுலினால் (20:31ல்) குறிப்பிடப்பட்ட “மூன்று வருஷங்கள்” என்பது முழுமையாகலாம். பவுல் தமது விசேஷ ஊழியப் பிரயாணங்களில் மிக அதிகமான காலம் ஓரிடத்தில் தங்கியது இதுவேயாகும், இது அவர் எபேசுவில் கண்ட தனிச் சிறப்பான வாய்ப்பைச் சுட்டிக்காட்டுகின்றது (1 கொரி. 16:9).

பெரும்பாலும் பவுலின் முயற்சிகளின் விளைவாக, வசனமானது எபேசுவில் மட்டுமின்றி, ரோமானியா மாகாண மாயிருந்த ஆசியா முழுவதிலும் பரவியது, ‘‘ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்’’ (அப். 19:10ஆ). பவுலின் எதிரிகள் பின்னாளில், “... இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவிலே மாத்திரமல்ல, கொஞ்சங் குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக் கொண்டான் ...” (வ. 26) என்று கூறினார்கள். ஆசியாவின் “ஏழு சபைகள்” (வெளி. 1:11) யாவும் இல்லா

விட்டாலும் அவைகளில் பெரும்பாலான சபைகள் மற்றும் கொலோசே மற்றும் எரோப்போலி ஆகிய இடங்களில் இருந்த சபைகள் ஆகியவை இந்தக் காலகட்டத்தில் நிலைநாட்டப் பட்டன (கொலோ. 1:2; 4:13), வரைபடத்தில் காணவும்.

எல்லா ஊழியத்தையும் பவுலே சென்று செய்யவில்லை. ஞானமுள்ள தலைவர் ஒருவர் மற்றவர்களுக்குப் பயிற்சி யளித்து, அவர்களை ஊக்குவித்து, தம்மைப் பெருக்கிக் கொள்ளுகின்றார். தீத்துவும் தீமோத்தேயும் எபேசு ஊழியத்தில் பவுலுக்குத் துணை புரிந்ததாக நாம் முன்பே குறிப்பிட்டோம். அது போலவே, எரஸ்து என்னும் பெயர் கொண்ட ஒரு சகோதரரும் (அப். 19:22), சொஸ்தனே என்பவரும் (1 கொரி. 1:1, 2) அவருடன் ஊழியம் செய்தனர். மற்றும், கொலோசெயில் இருந்து இரண்டு சகோதரர்கள்-எப்பாப்பிரா மற்றும் அர்க்கிப்பு - பவுலினால் பயிற்றுவிக்கப்பட்டு, ஊழியக் கட்டளை பெற்றுக் கொண்டார் கள் (கொலோ. 1:7, 8; 4:12, 13, 17; பிலே. 2, 23). “பவுலுக்கு வழித் துணையாய் வந்த மக்கெதோனியராகிய” (அப். 19:29) காயுவும் அரிஸ்தர்க்குவும் கூட அவருடன் ஆசியாவில் ஊழியம் செய்திருக்க வாய்ப்பு உள்ளது - மற்றும் பவுலின் ஊழிய நண்பர்களான ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் ஆகியோரை நாம் மறக்கக் கூடாது (18:18, 19, 26).

பவுல், தேவனுடைய வசனம் பற்றி தமது வெளியரங்கமான போதனையில் பெரும்பாலானவற்றை எபேசுவில், திறன்னு வின் பள்ளிக்கூடத்தில் போதித்தார் (19:9, 10). அந்த மாகாண முழுவதிலும் இருந்து வந்த மாணவர்களுக்கு அங்கு அவர் போதித்தார். அவர்கள் பிறகு வசனத்தைத் தங்கள் சொந்த நகரங்களுக்கு எடுத்துச் சென்றார்கள். எடுத்துக்காட்டாக, பின்னாளில் பவுல், கொலோசே, லவோதிக்கேயா, மற்றும் அப்பகுதியில் இருந்த (லவோதிக்கேயாவின் அருகில் இருந்த எரொப்போலி உட்பட) பிற நகரங்கள் ஆகியவற்றிற்கு தாம் மட்டும் சென்று போதித்ததாகக் கூறவில்லை (கொலோ. 2:1). கொலோசெ, அநேகமாய் லவோதிக்கேயா மற்றும் எரொப் போலி ஆகிய நகரங்களுக்கு சுவிசேஷமானது, பவுலின் ஆதரவில் வாழ்ந்த எப்பாப்பிராவினால்[6] எடுத்துச் செல்லப் பட்டது (கொலோ. 1:7, 8; 4:12, 13).

பவுல் மற்றும் அவரது உடன் ஊழியக்காரர்களுக்கிருந்த

வைராக்கியம் நமக்கு இருக்க வேண்டும் என்பதை நான் எவ்வளவாய் விரும்புகின்றேன்! அப்படியிருந்தால், நாம் வாழும் பகுதியில் உள்ள மக்கள் யாவரும் "கர்த்தருடைய வசனத்தைக் கேட்டார்கள்!" என்று கூற முடியும்.

## ஒரு புதிய அறைகூவல் (19:11-20)

இப்பொழுது நாம் எபேசுவில் இருந்த விசேஷித்த அறைகூவலிடத்தில் வருகின்றோம், இது உணரா அறிவினரின் அறைகூவல் ஆகும். இதற்கு முன் பவுல், ஒரு மந்திரவாதி (13:6-11) மற்றும் குறி சொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த பெண் (16:16-18) ஆகியோரை எதிர் கொண்டிருந்தார், ஆனால் எபேசுவில் இருந்த அளவுக்கு மந்திரவாதம் மற்றும் மூட நம்பிக்கை ஆகியவற்றை அவர் இதற்கு முன்பு ஒருபொழுதும் எதிர் நின்றதில்லை.

**பவுல் வல்லமை பெற்றிருந்தார்**

தேவன் ஒரு மனிதருக்குக் கட்டளையிடும்போது, அம்மனிதர் அக்கட்டளையை நிறைவேற்றத் தேவையான எல்லாவற்றையும் அவர் அம்மனிதருக்குத் தருகின்றார். பவுலின் மூலமாகத் தேவன் ஏற்கனவே அற்புதங்களைச் செய்திருந்தார் (14:8-10; 2 கொரி. 12:12ஐக் காணவும்), ஆனால் எபேசுவில் மந்திரவாத - ரீதியான, உணரா அறிவில் - ஊறித் தோய்ந்த சமுதாயத்தைப் பவுல் எதிர் கொள்ளுகையில், கர்த்தர் அவருக்கு இன்னும் மாபெரும் வல்லமைகளைக் கொடுத்தார்: "பவுலின் கைகளினாலே தேவன் *விசேஷித்த* அற்புதங்களைச் செய்தருளினார்" (அப். 19:11; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப் படுகின்றன). எல்லா அற்புதங்களும் அவைகளின் இயல்புப்படி விசேஷித்தவைகளேயாகும். ஆகையால் இந்த அற்புதங்கள் மிகவும் விசேஷித்தவைகளாகும்.

அற்புதங்கள் செய்யப்பட்ட முறைகளைக் காட்டிலும் அவைகளின் விளைவுகளில் அதிகமான விசேஷித்த தன்மை இருக்கவில்லை: "அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப்போயின;

பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன"[7] (வ. 12). மக்கள் பொருட்களைப் பவுலினிடத்தில் கொண்டு வந்து ஆசீர்வாதம் பெற்றதாக வசனம் கூறுவதில்லை, ஆனால் "அவருடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளை யும் எடுத்துச் சென்றார்கள்" என்று கூறுகின்றது. இது பவுல் சாதாரணமாக தமது உடலில் அணிந்திருந்த ஆடைகளைக் குறிக்கின்றது. ''உறுமால்கள்'' என்பவை ஓரத்தில் பின்னல் வேலை செய்யப்பட்ட சிறு சதுரத் துணிகள் அல்ல, ஆனால் அவைகள் பவுல் கூடார வேலை செய்யும்போது ஏற்படும் வியர்வையைத் துடைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பெரிய துணிகள் ஆகும். அவர் அன்றிருந்த (இன்றும் உள்ள) வழக்கத்தின்படியே இத்துணிகளைத் தமது தலையில் கட்டி யிருந்திருப்பார். மொழிபெயர்ப்பாளர் புரூஸ் இவைகளை, ''வியர்வைக் கந்தைகள்'' என்றும், வில்லியம் பார்க்ளே இவைகளை "வியர்வைக் கட்டுகள்" என்றும் அழைக்கின்றார் கள். ''கச்சைகள்'' என்பவை பவுல் தமது உடைகளைப் பாதுகாக்க அணிந்து கொண்ட உழைப்பாளிகளின் கச்சைகளாக இருந்திருக்கலாம்.[8]

''விசேஷித்த'' என்ற வார்த்தையானது, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் நடந்த அற்புதங்களில் இது வழக்க மற்றதாக இருந்ததால் இவ்வகையான குணப்படுத்துதல் விதிமுறைப்படியானது என்பதை விட விதிவிலக்காய் இருந்தது என்பதையே சுட்டிக்காட்டுகின்றது. ஏழைகள் மற்றும் வியாதிக்காரர்களை வஞ்சித்து வளம்பெறுபவர்களால் அப். 19:12 வசனப்பகுதியானது மிக விருப்பத்துடன் "ஆதார வசனம்" என்று பயன்படுத்தப்படுவதால், நான் இதைக் குறிப்பிட வேண்டியதாய் ஆயிற்று. குணப்படுத்துபவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் "ஆசீர்வதித்து" அனுப்பிய எல்லா கைக்குட்டைகளையும், துண்டுத் துணிகளையும் ஒன்று சேர்த்துத் தைத்தால், அவை நிச்சயமாய் உலகத்தின் பெரும் பகுதியை மூடிவிடும்!

மாற்கு 16:17, 18ல் இயேசுவின் வாக்குத்தத்தம்தான் பவுலின் மூலமாகத் தேவனால் செய்யப்பட்டது: "... என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; ... வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் ..."

*கர்த்தர் தாம் பவுலிடத்தில் ஒரு சிறப்பான வகையில் இருந்ததை எபேசியர்கள் அறிந்து கொள்ளும்படியாகவே ''பவுலின் கைகளினாலே'' அந்த அற்புதங்களைக் கர்த்தர் செய்தார்.*

**பேயோட்டியவர்கள் பெரும் சங்கடம் அடைந்தார்கள்**

*பவுலினால் செய்ய முடிந்தவைகளினால் ஈர்க்கப்பட்டவர் களில், "பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனு டைய குமாரர் ஏழு பேர்''(அப். 19:14)களும் இருந்தனர். "பிரதான ஆசாரியன்'' என்ற சொற்றொடரானது, ஸ்கேவா என்பவர் பிரதான ஆசாரியரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சுட்டிக்காட்டுவதாயிருக்கலாம்.[9] இது அவரது குடும்பத்தின் கள்ளத்தனமான உரிமைகோருதல்களை கனப்படுத்திக் கொள்ள சுய கற்பனையினால் மேற்கொள்ளப்பட்ட பட்ட மாக இருக்கவே அதிகம் வாய்ப்பு உள்ளது. (இது அமெரிக்கா வின் பழைய மேற்குப் பகுதியில் இருந்த வஞ்சகர்களில் சிலர் காப்புரிமை பெற்ற மருந்துகளைப் போலச் செய்வதற்கு தங்கள் பெயர்களுக்கு முன் "மருத்துவர்" அல்லது "பேராசிரியர்" என்ற பட்டத்தைச் சேர்த்துக் கொண்டது போன்றதாகும்). "லூக்காவின் நாட்களில் மேற்கோள் குறிகள் கண்டுபிடிக்கப் பட்டிருந்தால், லூக்கா இவ்வார்த்தைகளை மேற்கோள் குறிகளுடன் எழுதியிருப்பார்" என்கிறார் புரூஸ்.*

*''ஏழு'' என்ற எண்ணின் பயன்பாடானது இந்தக் குடும்பத்தின் "அற்புத இரகசியத்தினுடைய முன் உணர்வினை" கூட்டுகின்றது. ஏழு என்ற எண் - யூதர்களால் மட்டுமின்றி, மூடநம்பிக்கையுடையவர்களாலும் - விசேஷித்த தனிச் சிறப்புள்ளதாகக் கருதப்பட்டது.*

*இந்த ஏழு மகன்களையும், "தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகள்" (வ. 13அ) என்று லூக்கா விளக்கப்படுத்தினார்,* "Exorcist" *என்பது* "out" *என்று பொருள்படும் கிரேக்க வார்த்தை யாகும்,* "oath" *என்பதன் வினைவடிவப் பொருள் தரும் கிரேக்க வார்த்தையும் இணைந்த கிரேக்கக் கூட்டு வார்த்தையின் ஒலி பெயர்ப்புச் சொல் ஆகும். இது பொதுவாக, அசுத்த ஆவிகளை ''ஒரு வாக்குறுதியுடன் துரத்துதல்'' என்று குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், யூதர்கள் அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமை*

*தங்களுக்கு இருந்தது என்று உரிமைகோரிக் கொண்டதாக, உலகப் பிரகாரமான மற்றும் ஏவுதல் பெற்ற என்ற இருவகை யான எழுத்தாளர்களுமே பதிவு செய்துள்ளனர் (மத். 12:27; லூக். 11:19).*[10]

*வேதாகமம் முழுவதிலும், அப். 19:13ல் மட்டுமே* "exorcist" *என்ற வார்த்தை காணப்படுகின்றது. இயேசு ஒரு* exorcist *(பேயோட்டுபவர்) அல்ல. அசுத்த ஆவிகளைத் துரத்துவதற்கு அவர் ஒருபொழுதும் வாக்குறுதியைப் பயன்படுத்தவில்லை. அவர் வெறுமே, "நீ பேசாமல் ... புறப்பட்டுப் போ ...!" (மாற். 1:25) என்று கூறினார், ஆவிகள் கீழ்ப்படிந்தன (மத். 8:16; மாற். 5:8; 9:25; லூக். 4:35). அதுபோலவே, அப்போஸ்தலர்களும் அசுத்த ஆவிகளைத் துரத்திய போது, அதிலிருந்து ஏதொன்றையும் அவர்கள் உற்பத்தி செய்யவில்லை. எந்த விதச் சடங்காச்சாரமும் இல்லாமல், அவர்கள், "நீ ... புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளை யிடுகிறேன் ..!" (அப். 16:18) என்று கூறினார்கள் - அதுவே அச்செயலைக் கவனித்துக் கொண்டது.*[11]

*இந்த யூத "மந்திரவாதிகள்" உண்மையிலே ஆவிகளைத் துரத்த முடிந்ததா? இருந்திருக்கலாம்,*[12] *ஆனால் இந்த ஏழு பேரும் பின்வரும் காரணங்களினால் வஞ்சகர்களாய் இருந்தார் கள்:*[13] *(1) அவர்களுடைய செயல்பாடுகளின் அடிப்படையைக் கவனியுங்கள். நேர்மையான ஒரு மனிதர், திருடர்களின் கூடாரம் ஒன்றில் வியாபாரம் செய்வதைத் தவிர்க்கின்றார். இந்த மனிதர்களோ, எபேசு நகரில் இருந்த மாயவித்தைச் சுரண்டல்காரர்களுடன் இரண்டறக் கலந்திருந்தார்கள். (2) அவர்கள் "தேசாந்தரிகளாய் திரிகிறவர்கள்" (வ. 13) என்று விவரிக்கப்பட்டார்கள்.* KJV*யில்* "vagabond" *என்றுள்ளது;* NCV (New Century Version)*யில்* "were travelling around" *என்றுள்ளது. வஞ்சகர்கள் ஓரிடத்தில் நீண்ட நாட்கள் தங்கியிருப்பது அபாயமானதாகும்; அவர்கள் பொதுவாக இடம் மாறிக் கொண்டேயிருப்பார்கள். (3) அவர்கள் ஒரு அசுத்த ஆவியைத் துரத்துவதற்குப் பவுலின் வார்த்தைகளைப் பயன்படுத்த முடிவு செய்தார்கள் (வ. 13). பவுல் பெற்றிருந்த அதே வெற்றியை அவர்களும் ஏற்கனவே பெற்றிருந்தால், பவுலின் "மந்திர வார்த்தைகளை" அவர்கள் ஏன் பயன்படுத்த வேண்டும்?*

(4) விசுவாசமற்ற யூதர்கள் என்ற வகையில், அவர்கள் உணர்ந்தோ உணராமலோ சாத்தானுடன் நெருங்கி இணைந்து செயல்பட்டார்கள் (வெளி. 2:9). சாத்தான் தனக்கு ஊழியம் செய்கிறவர்களைக் கொண்டே அசுத்த ஆவிகளைத் துரத்தி னால் அது மதியீனமானதாகும் என்று இயேசு கூறினார் (மத். 12:26) - சாத்தான் மதியீனமானவனல்ல.

ஸ்கோவாவின் மகன்கள் பவுலின் வெற்றியைக் கண்ட போது, தங்களுக்குப் பவுலின் "மந்திர வேலை" பலிக்குமா என்று காண்பதற்கு, அதைப் பயன்படுத்த முடிவு செய்தார்கள். அவர்கள், "பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து;" (அப். 19:13ஆ). மூடநம்பிக்கையுடையவர்கள், சில வார்த்தைகளை அற்புதமானவைகள், மாயமந்திர வல்லமையுள்ளவைகள் என்று கருதுகின்றார்கள். பொருளற்ற பலவித உச்சரிப்புகளாகிய "இரகசியத்தை" க் கொண்டிருந்த தோல் சுருள்கள், அவைகளின் உரிமையாளருக்கு அற்புதமான வல்லமைகள் பலவற்றை "உத்தரவாதப் படுத்தியதால்" அளவற்ற விலைகளுக்கு விற்கப் பட்டன (வ. 19). இந்த ஏழு மகன்களும், "இயேசு" என்பதே பவுலின் "இரகசிய வார்த்தை" என்று முடிவு செய்தார்கள்.[14] அவர்கள் இயேசுவை நேரடியாக அறிந்திராததால், "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" (வ. 13இ; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்று கதறினார்கள்.

பொல்லாத ஆவியின் பதில்செயலில் கோணலான நகைச் சுவை காணப்படுகின்றது:

> பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்" என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்[15] மேல் பாய்ந்து, பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள் (வ. 15, 16).

பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதர், மனித இயல்புக்கு மேலான பலம் கொண்டவராகி (மாற். 5:2-4 ஐக் காணவும்),

பேயோட்டிகளாக இருக்க விரும்பின அவர்களின் உடைகளைக் கிழித்துப் போட்டு[16] உயிருக்குப் பயந்து ஓடும்படி அவர்களின் உடல்களை அடித்துக் காயப்படுத்தியது. "அவர்கள் [தங்கள் சடங்கில் இயேசுவின் பெயரைப்] பயன்படுத்த முயற்சி செய்த போது, அது பழக்கமற்ற ஒரு ஆயுதம் தவறாகக் கையாளப்பட்டு, அவர்களின் கரங்களில் வெடித்தது போலாயிற்று" என புரூஸ் விளக்கமளிக்கின்றார். இருளான உணரா அறிவுப் பண்பல்ல, ஆனால் "அவருடைய நாமத்தைப் பற்றும் *விசுவாசமே*'' இயேசுவின் வல்லமையைத் தந்தது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள் (அப். 3:16; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப் படுகின்றன).

## இயேசு மேன்மைப் படுத்தப்பட்டார்

பேயோட்டுவதில் ஏற்பட்ட முழுத் தோல்வியானது நகரம் முழுவதிலும் பரவியது: "இது எபேசுவில் குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது" (19:17அ). பவுல் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர் என்பதும், தங்களை அற்புதம் செய்பவர்கள் என்று அழைத்துக் கொண்டவர்கள் தேவனால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்பதும் தெளிவாயிற்று. எருசலேமில் அனனியா மற்றும் சப்பீராளுக்கு (5:10), தேவனுடைய தண்டனை கிடைத்த பிறகு பயம் உண்டானது போலவே, "அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்" (வ. 17ஆ) என்பது ஒரு விளைவாயிற்று. ''கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது" (19:17இ) என்பது இன்னொரு விளைவாக இருந்தது. இயேசுவின் நாமத்தைக் கண்மூடித்தனமாகப் பயன்படுத்துவது தங்கள் உடல்நலத்திற்கு ஊறுவிளைவிக்கக் கூடும் என்று மாயவித்தை நடப்பித்தவர்கள் கற்றுக் கொண்டார்கள்!

இந்த நிகழ்ச்சியானது சில கிறிஸ்தவர்களை உணர்வுடையவர்களாக்கியது என்பது மிகவும் முக்கியமான விளைவுகளில் ஒன்றாகும். எபேசியர்களில் சிலர், குழந்தைப் பருவத்திலிருந்தே ஆழமாய்க் கற்றறிந்திருந்த உணரா அறிவினரின் பழக்கங்களை தங்கள் மூடச் செயல்களை, கிறிஸ்தவர்களான பிறகு முழுவதும் கைவிட்டிருக்கவில்லை. சடங்காச்சாரமான ''மாய வேலைகள்"

என்பவை உண்மையான *அற்புதங்களில்* இருந்து தெளிவாகவே முரண்பட்டதினால், "விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்" (வ. 18). தொடர்ந்த செயல்பாட்டைக் கவனியுங்கள்: "... வந்து, ... வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்." முதலாவதாக ஒரு கிறிஸ்தவர் முன்னதாக அடியெடுத்து வைத்து, தமது தவறான செயல்களை அறிக்கையிட்டுக் கதறி அழுதார்; பிறகு இரண்டாவது ஒருவர் வந்தார்; பிறகு ஒரு டஜனுக்கும் அதிகமானவர்கள் வந்தார்கள்; கடைசியில் ஆண்கள் மற்றும் பெண்கள் யாவரும் வெள்ளமெனப் பெருகி வந்து கடந்த காலத்தில் மூடநம்பிக்கையில் தங்களுக்கிருந்த கட்டுக்கள் எல்லாவற்றையும் ஒரேயடியாக உடைத்தெறியும்படி முன் வந்தார்கள்.

"தங்கள் செய்கைகளை *வெளிப்படுத்தி*" என்ற சொற்றொடரை அடிக்கோடிடுங்கள். "உணரா அறிவு" என்ற வார்த்தையானது "மறைவானது" என்ற நேரடியான அர்த்தம் உள்ளது என்பதை நினைவில் வையுங்கள். உணரா அறிவினரின் உலகத்தில் வியாபாரத்திற்கென்று வைக்கப்பட்டிருந்த (வைக்கப்பட்டிருக்கும்) சரக்கு "இரகசிய அறிவு" என்பதே யாகும், இது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கும். அந்த இரகசியங்களை வெளிப்படுத்துவதென்பது உணரா அறிவினருடன் உள்ள எல்லா விதமான சம்பந்தங்களையும் முறித்துப் போடுவதாகும்.

பேயோட்டுவதில் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்த மேற்கொள்ளப்பட்டுச் சிதைவடைந்த முயற்சியினால் சபைக்குள்ளிருந்தவர்கள் மட்டுமல்லாது, சபைக்குப் புறம்பே இருந்தவர்களும் பாதிக்கப்பட்டார்கள். இவ்விதமாக, "மாய வித்தைக்காரர்களாயிருந்தவர்களில் அநேகர் [கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்கள் யாவரும் ஒன்று போலவே] தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்" (வ. 19). இந்தச் சுருள்களில் மந்திரங்களும், ஆசீர்வாத மற்றும் சாப வார்த்தைகளும், காதல் மயக்கங்களுக்கு மருந்துக் குறிப்பு முறைகளும், ஆவிகளைத் துரத்தும் சூத்திரங்களும்,

எதிர்காலத்தைப் பற்றிக் கூற வழிமுறைகளும், இன்னும் பல விஷயங்களும் இருந்தன. “வெள்ளிக்காசு” என்பது அநேகமாய், கிரேக்கத் திராக்மாக்களாய் இருக்கலாம். ரோமானிய தினேரியத்தைப் போல, வேலையாள் ஒருவரின் ஒரு நாள் கூலியாக திராக்மா என்ற வெள்ளி நாணயமும் இருந்தது. சுட்டெரிக்கப்பட்டவைகளின் விலையை மதிப்பிடுவதற்கு, உங்கள் பகுதியில் சாதாரணமாக ஒரு நாள் கூலி என்று தரப்படும் பணத்தை ஐம்பதினாயிரத்தால் பெருக்கிப் பாருங்கள்! பத்தாயிரக் கணக்கான, ஒருவேளை நூறாயிரக் கணக்கான ரூபாய்கள் புகையாகின!

இந்த மக்கள் தங்களின் புத்தகங்களை விற்று, கர்த்தருடைய ஊழியத்திற்குக் கொடுக்காதது ஏன்? என்று சிலர் ஆச்சரியப் படலாம். தங்களின் ‘‘எபேசியக் கடிதங்களை’’ நெருப்பில் எறிந்தவர்கள் ஒரு உறுதிக் கூற்றை மேற் கொண்டார்கள்: அவர்கள் தங்களின் கடந்த காலம் முழுவதையும் ஒழித்து விட்டார்கள், அதை எல்லாரும் அறிய வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்! (மத். 3:8ஐக் காணவும்). மேலும் அந்த தேவபக்தியற்ற பதிவேடுகள் இனியும் எவர் ஒருவரின் வாழ்க்கையையும் சபிப்பதை அவர்கள் விரும்பவில்லை.

இதன் விளைவாக, “... பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது” (வ. 20).[17] எபேசியரின் அறைகூவலானது ஒரு நம்பக்கூடாத வகையில் சந்திக்க நேர்ந்தது.

## தொடரும் அறைகூவல்

எபேசியச் சொக்கப்பனைத் தீயின் புகையானது மேல் நோக்கிச் சுழன்று செல்வதை நாம் கவனிக்கையில், ‘‘நமது சொந்த வாழ்க்கையில் நாம் மேற்கொள்ளும்படியாகத் தேவன் விரும்பும் பயன்பாடு என்ன?’’ என்று நாம் கேட்பது தேவை.

### சாத்தானுடைய பழக்கங்களுடன் உள்ள எந்த உறவுகளையும் உடைத்தெறியுங்கள்

உணரா அறிவுடன் நாம் கொண்டுள்ள எந்தவித உறவுகளையும் உடைத்தெறிய வேண்டும் என்பதே தேவன்

*விரும்புகின்ற தெளிவான ஒரு பயன்பாடாகும். ஜாதகங்கள், மனோவசிய உடனடித் தொடர்புகள், அவுஜா பலகைகள்,[18] அல்லது நல்லதிர்ஷ்ட மந்திரங்கள் ஆகியவைகளிடத்தில் கிறிஸ்தவர்களுக்கு வேலையொன்றுமில்லை. உணரா அறிவென்பது பல அபாயங்களைக் கொண்டுள்ளது.*

*(1) நாம் பெற்றிருக்க வேண்டும் என்பதாகத் தேவன் விரும்பாத ஒரு அறிவை விரும்பும் அபாயம் உள்ளது (உபா. 29:29). "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவையும்" வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 14:26;[19] 2 பேது. 1:3; 2 தீமோ. 3:16, 17; கொலோ. 1:28). நாம் பதில் களைத் தேடும்போது, "உறுதியான வழியைக் காண்பதற்குப் பதிலாகப் பெரும்பாலும் நாம் குறுக்கு வழியை காணவே முயற்சி செய்கின்றோம்" என்று ரிக் ஆட்ச்லி பிரசங்கித்தார். தடை செய்யப்பட்ட அறிவின்மேல் கொண்ட விருப்பமே மனிதனுடைய வீழ்ச்சி என்ற விளைவை உண்டாக்கியது என்பதை நினைவில் வையுங்கள் (ஆதி. 3:1-7).*

*(2) நித்தியமான சத்தியங்களைக் கற்றுக் கொள்வதற்குப் பதிலாக நோய் கொண்ட ஆர்வங்களைத் திருப்திப் படுத்தும் முயற்சி என்ற அபாயம் உள்ளது. உணரா அறிவின் "வெளிப் படுத்துதல்கள்" அற்பமானவைகளில் கவனம் செலுத்துகின்றன; வேதாகமம் நமக்கு, பாவம் மற்றும் இரட்சிப்பைப் பற்றியும், பரலோகம் மற்றும் நரகம் பற்றியும் கூறுகின்றது.*

*(3) நமது வாழ்க்கையைத் தேவனை மையமாய்க் கொண்ட தாகச் செய்வதற்குப் பதில், மனிதனை மையமாகக் கொண்ட தாகச் செய்து விடும் அபாயம் உள்ளது. உணரா அறிவினரின் உலகமானது, "விஷயங்களின் திட்டத்தில் உங்களின் தனிப் பட்ட பிரச்சனைகள் முக்கியமானவைகளாய் இருக்கின்றன, உங்களின் சொந்த முயற்சிகளினால் அந்தப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும்" என்று கூறுகின்றது. உணரா அறிவினுள் ஒருவர் எவ்வளவு தூரம் செல்கின்றாரோ, அவ்வளவு தூரம் அவர் தேவனை விட்டுப் பிரிந்து செல்பவராய் இருக்கின்றார்.*

*(4) நமது சிந்தைகளைப் பொல்லாங்கின் கட்டுப்பாட்டிற் குத் திறந்த நிலையில் வைத்து விடும் அபாயம் உள்ளது. உணரா அறிவின் உலகத்தில் நுழையும் ஒருவர், பிசாசின் எல்லைப்*

பகுதியில் நுழைகின்றார். உணரா அறிவின் நடைமுறைகள் பலவற்றில், சித்தத்தை ஒப்புக் கொடுத்தல் ஈடுபடுத்தப் படுகின்றது (''உங்கள் மனதை வெறுமையாக்குங்கள்,'' போன்றவை). உணரா அறிவின் நடைமுறை ஒவ்வொன்றும் சாத்தானுக்கு, உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பைக் கொடுக்கின்றது. அனனியா தனது இருதயத்தை சாத்தான் நிரப்பும்படி அனுமதித்தார் (அப். 5:3ஐக் காணவும்); நீங்கள் இடம் கொடுத்தால் சாத்தான் உங்களுடைய இருதயத்தையும் நிரப்பி விடுவான்!

(5) சத்தியத்திலிருந்து, தவறுக்கு வழிநடத்தப்படக் கூடிய அபாயம் உள்ளது, இவ்விதமாக இழந்து போகப்படுதலும் ஏற்படுகின்றது. தேவனுடைய சித்தத்திற்கு எதிரானவைகள் எதையும் ஊக்குவிப்பதில் சாத்தானுக்கு இருக்கும் அதே நோக்கம்தான் உணரா அறிவை வளர்த்து உற்சாகப் படுத்து வதிலும் இருக்கின்றது: மக்கள் கர்த்தரையல்ல, தன்னைப் பின்பற்ற வேண்டும் என்றே அவன் எண்ணுகின்றான்; நாம் எல்லாரும் பரலோகத்தில் தேவனுடனல்ல, நரகத்தில் அவனு டன் நித்தியத்திற்கும் இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். உணரா அறிவிலிருந்து ஒதுங்கி விலகியிருக் கும்படி தேவன் தமது வசனத்தில் தெளிவாக நமக்குக் கட்டளையிடுகின்றார்.

கிறிஸ்தவரல்லாதவர், "இப்பிரபஞ்சத்தின் தேவனானவ னால்" குருடாக்கப்பட்டிருக்கின்றார் (2 கொரி. 4:4), அவர் ஜாதகங்கள், மனோவசிய உடனடித் தொடர்புகள், அவுஜா பலகைகள் மற்றும் நல்லதிர்ஷ்ட மந்திரங்கள் ஆகியவற்றை தீங்கில்லாதவைகளாகக் கண்ணோக்குபவராய் இருக்கக் கூடும், ஆனால் வசனத்தினால் ஒளியூட்டப்பட்ட கிறிஸ்தவர், இவை யாவும் கோபத்தில் சலசலக்கும் பாம்பைப் போன்று அபாய மிக்கவை என்று அறிந்துள்ளார். இவைகளுக்கு எவ்வித விருப்ப மும் இன்றி "கைகளை உதறிவிடுதலே" கிறிஸ்தவரின் கொள்கை யாக உள்ளது. உணரா அறிவுடன் ''ஒரு சிறிது மட்டும்'' விளையாடுதல் என்பது ''ஒரு சிறிது மட்டும்'' கர்ப்பமாய் இருத்தல் என்பது போன்றதேயாகும்.

***கடந்த காலப் பாவ நிறைவுடன் உள்ள எல்லா உறவுகளையும் முறித்துப் போடுங்கள்***

*“ஆனால், உணரா அறிவுடன் நான் ஒன்றும் செய்வதற் கில்லை” என்று நீங்கள் கூறிக் கொண்டிருக்கலாம். நீங்கள் ஒன்றும் செய்யவில்லை என்றாலும் கூட, நமது வேதபாடப் பகுதியில் இன்னமும் உங்களுக்கு வல்லமையுள்ள செய்தி யொன்று இருக்கின்றது: உங்களின் கடந்த காலப் பாவ நிறை வுடன் உங்களுக்குள்ள எல்லாக் உறவுகளையும் உடைத்தெறிய நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.*

*பொதுக் கோட்பாட்டின்படி, நாம் மனந்திரும்பி கிறிஸ்தவர்களாகும்போது, கடந்த காலத்தின் பாவங்களுடன் உள்ள உறவுகள் யாவையும் முறிக்கப்படுகின்றது (அப். 2:38). இருப்பினும், உடனடியாக ஒவ்வொன்றிலிருந்தும் நடைமுறை யில் விடுவிக்கப்படுதல் என்பது கடினமானதாக இருக்கின்றது. விசுவாசித்திருந்த எபேசியர்களில் பலர் தங்களின் கடந்த கால உணரா அறிவுடன் இன்னமும் தங்களுக்குள்ள உறவுகளை வைத்திருந்தார்கள் (19:18). அது போலவே, நாமும் கூட நம்மை வல்லமையாய் வசீகரிக்கும் பாவம் எதனுடனாவது இன்னமும் ஒட்டிக் கொண்டிருக்கலாம். இதன் அளவானது பொய்கள் கூறுவதிலிருந்து, நமது வருமான வரியில் ஏய்ப்பு செய்வது வரையிருக்கலாம், காமச் சிந்தனைகளுக்கு விருந்தளிப் பதிலிருந்து, ஆபாச இலக்கியத்தை அடியொற்றிச் செல்லுவது வரையிருக்கலாம்.*

*ஒரு இளம் மனிதர் ஞானஸ்நானம் பெற்றுப் பல வாரங் களுக்குப் பின்பு, பிரசங்கியார் நடத்திய வேதபாட வகுப் பொன்றுக்கு, “பிளேபாய்” என்ற ஆபாச இதழ்கள் அடங்கிய பெரிய பெட்டியொன்றைக் கொண்டு வந்தார். அவர், “நான் ஒரு கிறிஸ்தவனாகி விட்டதால் இவைகளை வைத்துக் கொள்ள முடியாது” என்று கூறினார். அவரும் பிரசங்கியாரும் சேர்ந்து, அவைகளை அழித்தார்கள். இன்னும் பல வாரங்கள் கடந்த பிறகு, மறுபடியும் பிரசங்கியார் நடத்திய வேதபாட வகுப் பொன்றிற்கு வரும்போது, அந்த இளம் மனிதர், தமது கையில் மிகப் பெரிய காகித உறை ஒன்றைக் கொண்டு வந்தார். அந்த உறையை அவர் பிரசங்கியாரின் மேஜை மேல் வைத்தார், மடைமையான நாணத்துடன், “அந்த புத்தகங்களை உங்களி*

டத்தில் கொடுப்பதற்கு முன்பு அவற்றிலிருந்து கத்தரித்து எடுத்து வைத்திருந்த படங்கள் இவைகள்" என்று கூறினார். கடந்த காலப் பாவ நிறைவுடன் உள்ள உறவுகள் எல்லா வற்றையும் உடைத்தெறிவது கடினமாக இருக்கின்றது.

நம்மில் சிலருக்கு, நமது இருதயங்கள் மற்றும் வாழ்க்கையில் நாம் சேர்த்து வைத்துள்ள பாவ சிந்தனைகள் மற்றும் பழக்கங் கள் "தீயில் வீசியெறிவதற்கு" நமக்குச் சொந்தமான தனிப்பட்ட சொக்கப்பனை தேவைப்படுகின்றது.

## முடிவுரை

உணரா அறிவின் நடைமுறைகளில் எபேசியர்கள் தவறான வர்களாய் இருந்தார்கள், ஆனால் ஆவிக்குரிய உலகத்தை நம்பியதில் அவர்கள் சரியானவர்களாய் இருந்தார்கள். பின்னாளில் பவுல் இவ்வாறு எழுதினார்:

> நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணி யுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத் தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத் தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபே. 6:11, 12).

ஒரு மனிதருடைய விருப்பத்திற்கு மாறாக அவரது சரீரத்தை அசுத்த ஆவிகள் கட்டுப்படுத்துவது இனி முடியாத விஷயமாய் இருக்கின்றது, ஆனால் நாம் அவனை அப்படிச் செய்ய அனு மதித்தால் சாத்தான் நம்முடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்த முடியாதென்று இது அர்த்தப்படுத்துவதில்லை. (நல்ல சக்திகள் செய்யக் கூடியவைகளை விட அதிகமாக) துன்மார்க்க சக்திகள் எந்தவித அற்புதங்களையும் செய்து விட முடியாது, ஆனால் இது, எச்சரிக்கையாயில்லாதவர்களைச் சாத்தான் மோசம் போக்க முடியாதென்று அர்த்தப்படுத்துவதில்லை (வெளி. 20:10). நமது "எதிராளியாகிய பிசாசானவன்" இன்னமும் "கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்ற

*வகை தேடிச் சுற்றித் திரிகிறான்" (1 பேது. 5:8) என்பதில் நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். "அவனுடைய தந்திர மான திட்டங்களை அறியாதவர்களாய் நாம் இருக்க வேண்டாம்" (2 கொரி. 2:11).*

*கர்த்தரிடத்தில் நாம் நெருங்கியிருந்தால், சாத்தானுக்கு அஞ்சத் தேவையில்லை (யாக். 4:7). யோவான் நமக்குப் பின்வரும் உறுதிப்பாட்டைக் கொடுத்தார்: "... உலகத்திலிருக் கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" (1 யோவா. 4:4). இதற்கு மாறாக, கிறிஸ்து உங்களுக்குள் இல்லையென்றால், இந்த உலகத்திலிருக்கிறவன் உங்களிலும் வல்லமையுள்ள வனாயிருக்கின்றான்! இது எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடிய விஷயம் அல்ல. ஆவிக்குரிய யுத்தத்தில் நீங்கள் வெற்றி பெறுவதற்கு நீங்கள் கிறிஸ்துவின் உதவியைப் பெற்றிருக்க வேண்டும்! நீங்கள் இன்னும் அவருடைய நாமத்தைத் தரித்துக் கொள்ளாதிருந்தால், ஞானஸ்நானத்தில் அவருடன் இணையா திருந்தால் (கலா. 3:26, 27), நீங்கள் உடனே அதைச் செய்ய வேண்டியது அவசியமாகும். நீங்கள் கிறிஸ்தவராய் இருந்து, உங்கள் இருதயத்தில் இன்னமும் சிலவற்றைத் தேக்கி வைத்திருந்து, சாத்தானுக்குப் பிடி கொடுக்கும் வாழ்க்கை வாழ்பவராயிருந்தால், எபேசியர்களின் தைரியம் உங்களுக்குத் தேவை: உங்கள் சகோதரர்களுக்கு முன்பாக வந்து, "[உங்கள்] செய்கைகளை வெளிப்படுத்தி, அறிக்கையிடுங்கள்" (அப். 19:18; அப். 8:24; யாக். 5:16 ஆகியவற்றைக் காணவும்)!*

---

*குறிப்புகள்*

*[1]தேவபயமுள்ளவர்களிடத்தில் வழக்கத்தை விட அவர் குறைவான வெற்றி பெற்றிருந்திருக்கவும் வாய்ப்பு உண்டு, எனவேதான் யூதர்கள் மிக விரைவில் பொறாமை கொள்ளவில்லை. [2]சில மொழிபெயர்ப்புகளில் (தமிழில் உள்ளது போலவே) "அவிசுவாசிகளாகிய" அல்லது அதற்குச் சம அர்த்தமுள்ள வார்த்தைகள் காணப்படுகின்றது. இவ்விடத்தில் பயன் படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையானது கீழ்ப்படியாமையையே குறிக்கின்றது, ஆனால் கீழ்ப்படியாமை என்பதன் பின்னால் அவிசுவாசம் இருக்கிறது என்பது மறைமுகக் கருத்தாகும். இரட்சிக்கும் விசுவாசமும் கீழ்ப்படிதலும் இணைந்து செல்வதாயிருக்கின்றன. [3]"கூட்டம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது மார்க்க*

சமுதாயத்தை நுட்பமாய்க் குறிப்பிடவும் கூடும். இவ்விதமாக, வசனம் 9ல் சில மொழிபெயர்ப்புகளில் "சபைக்கு முன்னதாக" என்றுள்ளது. NASBயில் உள்ள "கூட்டம்" என்ற வார்த்தை சரியானது என்ற அநுமானத்தில் என் விளக்கவுரைகள் அமைந்துள்ளன. [4]அமெரிக்காவில் சபையின் தொடக்க நாட்களில், புதிய பகுதிக்குச் செல்லும் பிரசங்கியார் ஒருவர், அங்குள்ள பள்ளிக் கட்டிடம் ஒன்றை முதலில் முயன்று பெற்று, பிறகு அவர் அங்கு ஒவ்வொரு இரவிலும் போதிப்பது உண்டு. நூற்றுக்கணக்கான சமூகங்களில் இவ்விதமாகவே சபை நிலைநாட்டப்பட்டது. [5]"வித்தியா சாலை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "இளைப்பாறுதல்" அல்லது "ஓய்வு நேரம்" என்ற வார்த்தையுடன் தொடர்புடையதாய் இருக்கின்றது. திறன்னுவின் பள்ளிக்கூடமானது உடற்பயிற்சி சாலை யொன்றில் நடத்தப் பெற்றிருந்தாகச் சிலர் நினைக்கின்றார்கள். இந்நாட்களில் இருப்பது போலன்றி, அந்நாட்களில் உடற்பயிற்சி சாலைகள் என்பவை உடல் மற்றும் மனம் ஆகியவற்றிற்குப் பயிற்சியளித்தன; அங்கு உடற்பயிற்சி செய்யவும், போதிக்கவும் இடங்கள் இருந்தன. [6]எப்பாப்பிரா வும் பவுலுடன் சற்றுப் பயணம் செய்தார் என்பது உறுதியாகும். அவர் பவுலுடன் ரோமாபுரியில் இருந்தார் (கொலோ. 4:12, 13), மற்றும் அவர் "கூடக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்" (பிலே. 23) என்றும் கூட அழைக்கப்பட்டார். [7]மருத்துவர் லூக்கா, மீண்டும் ஒருமுறை வியாதிக்கும், பொல்லாத ஆவிக்கும் உள்ள வித்தியாசத்தை காட்டுகின்றார். [8]இந்த "விசேஷித்த அற்புதங்கள்" நமக்கு, இயேசுவின் ஆடைகளைத் தொட்ட போது குணமடைந்தவர்களை நினைவூட்டுகின்றன (மாற். 5:25-29; 6:56). மேலும், பேதுருவின் நிழல் விழும்படியாக வியாதியஸ்தர்கள் காத்திருந்த நேரம் பற்றியும் நாம் நினைப்பூட்டுகின்றோம் ("அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் 5:15க்கான குறிப்புகளைக் காணவும்). [9]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் 4:6க்கான குறிப்பு களைக் காணவும். "பிரதான ஆசாரியர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது அவ்வார்த்தை பன்மைப் பொருளில் பயன் படுத்தப்படும்போது மட்டும் chief priest என்று (மத். 2:4; முதலியன) வழக்கமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (இவ்விடத்தில் உள்ளது போல்) ஒருமைப் பொருளில் வரும்போது, இது வழக்கமாக high priest (அப். 4:6; முதலியன) என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விதமாக, KJVயில் இவ்விடத்தில் *high* priest என்றுள்ளது. இருப்பினும், ஸ்கேவா என்ற பெயருடைய பிரதான ஆசாரியர் ஒருவர் ஒருபொழுதும் இல்லாததால், NASB மொழிபெயர்ப்பாளர்கள் இங்கு, chief priest என்ற வார்த்தையைத் தருவதற்கு முடிவு செய்தார்கள். [10]"உரிமை கோரினார்கள்" என்ற வார்த்தையை நான் பயன்படுத்துகின்றேன், ஏனென்றால், யூதர்கள் உண்மையாகவே அசுத்த ஆவிகளைத் துரத்த முடியும் என்று முடிவெடுக்க நம்மை வலியுறுத்தும் வசனப்பகுதிகள் எதுவும் இல்லை. மத்தேயு 12 (மற்றும் லூக்கா 11)ல் உள்ள இயேசுவின் விவாதமானது அசுத்த ஆவிகளை யூதர்களால் துரத்த முடியுமா இல்லையா என்ற இரு தரப்பு வாதங்களுக்கும் சமமான கனம் தருவதாகவே இருக்கின்றது; இயேசுவைக் குற்றம் சாட்டிய வர்கள், தங்கள் சக யூதர்களால் அசுத்த ஆவிகளைத் துரத்த முடியும் என்று நம்பினார்கள் என்பதே கருத்தாகும்.

[11]“பேயோட்டும்” சடங்குகள் என்று அழைக்கப்படும் மார்க்கக் குழுக்கள் சிலவற்றின் செயல்கள் தேவனிடமிருந்து வந்தவையல்ல, ஆனால் இடைக்கால மூட நம்பிக்கைகளில் இருந்து தொடங்கியவையாகும். [12]புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில், நல்ல சக்திகள் மட்டுமின்றி, தீய சக்திகளும் ஓரளவு அற்புத வல்லமைகள் பெற்றிருந்தன. அற்புதங்கள் செய்யும் வல்லமைகள் ஒழிந்து போனபோது, அது நல்ல சக்திகள் மற்றும் தீய சக்திகள் யாவற்றுக்கும் ஒழிந்து போயிற்று. “அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 2” இதழில் “அசுத்த ஆவிகள்: இயற்கைக்கு அப்பாற்பட்ட பொல்லாத சக்திகள்” என்ற விசேஷ கட்டுரையையும், “தெய்வீக வல்லமை யில் மூன்று வெளிப்பாடுகள்” என்ற விசேஷ கட்டுரையையும் காணவும். [13]சீமோன் (8:9-13) மற்றும் பர்இயேசு (13:6-12) போன்ற பொய்யான அற்புதங்கள் செய்தவர்களுடன் இவர்கள் வகைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் நம்புகின்றேன். [14]உலகப்படியான சில செயல்பாட்டாளர்களும் கூட இதையே முடிவு செய்தார்கள். கண்டுபிடிக்கப்பட்ட பழங்காலப் பதிவு ஒன்றில் “எபிரெயர்களின் கடவுளாகிய இயேசுவின் பெயரால் ஆணையிடு கின்றேன்” என்ற வார்த்தைகள் அடங்கியுள்ளன. இது சில வியாதிகளைக் குணப்படுத்தப் பயன்பட்ட மந்திர வார்த்தைகளின் ஒரு பகுதியாக இருந்தது. [15]சில மொழிபெயர்ப்புகளில் இவ்விடத்தில் “அவர்கள் இருவரும் மேலும்” என்றுள்ளது, இது, அந்த ஏழு பேரில் இருவர் மாத்திரம் அந்தப் பரிசோதனையை முயற்சி செய்தார்கள் என்ற ஆலோசனையைத் தருகின்றது. NASBயில் “எல்லார் மேலும்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது “இருவர்” அல்லது “இருவர் அல்லது அதிகமான வர்கள்” என்று அர்த்தப்படக் கூடியதாக இருக்கின்றது. [16]“நிர்வாணிகள்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது “ஆடையின்றி” என்று அர்த்தப்பட வேண்டிய அவசியமற்றுள்ளது. அது “போதிய ஆடையின்றி” என்றும் அர்த்தப்படக் கூடும். இருப்பினும், அந்த ஏழு மனிதர்களும் தங்கள் மரியாதையை இழந்ததோடு, தங்கள் மானத்தை யும் இழந்தார்கள் என்பது தெளிவாய்க் காணப்படுகின்றது. [17]இது வளர்ச்சி பற்றி லூக்கா கொடுத்த ஐந்தாவது அறிக்கையாகும். [18]மில்ட்டன் பிராட்லி விளையாட்டு நிறுவனத்தார் அவுஜா போர்டை ஒரு விளையாட்டுப் பொருளாக விற்பனை செய்யலாம், ஆனால் அது ஒரு விளையாட்டு அல்ல. அது உணரா அறிவிற்கான ஒரு கருவியாகும். [19]இது அப்போஸ்தலர் களுக்கான ஒரு வாக்குத்தத்தமாய் இருந்தது, நமக்கானதல்ல; 2 பேதுருவிலிருந்து இங்கு தரப்பட்டுள்ள குறிப்பு வசனமானது அப்போஸ் தலர்களுக்கு கொடுத்த இந்த வாக்குத்தத்தத்தை இயேசு நிறைவேற்றியதைக் காண்பிக்கின்றது.